விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 316 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 13 புதன்கிழமை (30.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# பயங்கரவாதச் சட்டத்தை திருத்த உத்தேசம்

## அமைச்சர் விஜித ஹேரத்

- அரச ஊழியர்களுக்கு அடுத்த வருடம் முதல் சம்பள அதிகரிப்பு.
- சில நடைமுறைகளுடன் வாகன இறக்குமதிக்கு அனுமதி.

(15ஆம் பக்கம் பார்க்க)



# பன்றிகளிடையே வைரஸ்

## அபாய நிலை பிரகடனம்

(கொழும்பு)

வரும் ஆபிரிக்க பன்றிகளிடையே பரவி வைரஸ் தொற்றுக் 02

# மண்டைதீவில் காணி சுவீகரிப்பு நிறுத்தம்

(மண்டைதீவு)

கடற்படையினரின் தேவைக்காக மண்டைதீவில் பொது மக்களின் காணி சுவீகரிப்பு முயற்சியானது பொது 15



# சாவகச்சேரி நீதிமன்றில் வெடிகுண்டு எனப் புரளி

## பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றில் வெடிகுண்டு இருப்பதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து நீதிமன்ற வளாகம் முழுவதும் பாதுகாப்பு 15

# அஞ்சல் வாக்களிப்பு

## இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. 15

# யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

இரு வேறு சம்பவங்களில் யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம் கிறிஸ்தவ குளத்தில், காட்டு யானையின் தாக்கு 02










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



அன்பான மக்களே!
நம்பிக்கையுடன் எங்களை ஆதரியுங்கள்!



வீ.ஆனந்தசங்கரி
(முதன்மை வேட்பாளர்)

இல. 8



செல்லையா
சுந்தரமூர்த்தி

(027)

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)

X இல. 9

நேர்த்தியான நெடும் பயணம்!

1 2 3 4 5 6 7 8 9


# பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில்

## ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று காலை ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்றது.



வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில்,

விமான நிலையத்தின் விமான ஓடுபாதை விஸ்தரிப்பது தொடர்பாகவும் அனைத்து விதமான சர்வதேச விமானங்களும் வந்து செல்லக் கூடியவகையில் விமான ஓடுபாதை விஸ்தரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது. விமான நிலைய அபிவிருத்தி, விமான நிலைய உட்கட்டுமான அபிவிருத்தி, விமான நிலையத்திற்கு வரும் பயணிகளின் நலன் சார்ந்த உட்கட்டமைப்பு வசதி வாய்ப்புகள் அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

விமான நிலையத்துக்கு வந்தடைந்த பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்ளாதவாறு விமான நிலையம் மட்டுமன்றி சுற்றியுள்ள பிரதேசத்தின் வீதி அபிவிருத்தி செய்தல், வீதிமின் விளக்குகள் பொருத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய பிரதேச சபைக்கு ஆளுநர் அவர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டு விமான நிலையத்திற்காக ஒப்படைக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளுக்கான இன்றைய பெறுமதியை காணி உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் விமான நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டமிடல் தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (ம-7)

## யானை...

தலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவன் நேற்று செவ்வாய்க்கிழமை (29) உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிறிஸ்தவகுளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய விக்னேஸ்வரன் கேதீஸ்வரன் என்பவரே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாந்தை கிழக்கு மூன்று முறிப்பு இளமருதங்குளம் பகுதியில் யானை தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு நேற்றிரவு வீட்டிலிருந்து வெளியில் வந்தபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்தில் 68 வயதுடைய சிவஞானம் ஸ்ரீஸ்கந்தராசா என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பன்றிகளி...

காரணமாக நாட்ளாவிய ரீதியில் அபாய நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பன்றிகளை நோய் அபாயம் கொண்ட விலங்குகளாகப் பிரகடனப் படுத்துவதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவலயின் கையொப்பத்துடன் நேற்று (29) அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பன்றி இறைச்சியை விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் பன்றி இறைச்சி உற்பத்திகளைத் தயாரித்தல் ஆகிய செயற்பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த தீர்மானம் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அமுலிலிருக்கு மனவும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## மரண அறிவித்தல்



பிறப்பு
08 - 03 - 1941

இறப்பு
29 - 10 - 2024

## கந்தசாமி சத்தியநாதன்

தம்பகந்தம்பி வீதி, குமார கோவிலடி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சத்தியநாதன் அவர்கள் 29.10.2024 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தாம்பிகையின் பாசமிகு கணவரும் அ.தயாளினி, ஜீ.பரமேஸ்வரி, கா.சாந்தினி, ச.வாகீசன், ச.ஆதித்தன், ச.சஞ்சீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பா.சரோஜினிதேவி, க.பத்மநாதன், வ.பத்மாவதி அமரர் வே.சகுந்தலாதேவி ஆகியோரின் சகோதரனும் அ.அனுஸ், கா.அகன்யா, ஆ.ஆராதனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.10.2024 புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

ச.வாகீசன் (மகன்)
077 072 2618

தகவல்:
குடும்பத்தினர்

(2534)


## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




திருமதி பங்கஜம் பாலகிருஷ்ணா
(கலைப் பட்டதாரி)

03.10.1994 – 23.05.1997
வவுனியா பூவரசம் குளம் மகா வித்தியாலயம்.
24.05.1997 – 24.01.1999
வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம்
25.01.1999 – 24.01.2002
வவுனியா மதீனா வித்தியாலயம்.
25.01.2002 – 26.06.2007
வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயம்
27.06.2007 – 03.03.2015
வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
04.03.2015 – 24.09.2017
வவுனியா பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம்
25.09.2017 – 31.12 2018
வவுனியா காமினி மகா வித்தியாலயம்
01.01.2019 – 30.10.2024
யாழ்ப்பாணம் நடேஸ்வரக் கல்லூரி

எமது பாடசாலையில் பணியாற்றி 30.10.2024 இன்று எமது பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி பங்கஜம் பாலகிருஷ்ணா அவர்களை சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(2524)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# தேர்தல் பிரசாரங்களில் டிஜிட்டல் திரைக்கு தடை!

## தேர்தல் ஆணைக்குழு

**(கொழும்பு) தேர்தல் பிரசாரத்திற்கு டிஜிட்டல் திரைகளைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**

இவ்வாறான பிரசாரம் மேற்கொள்ளப்படுமாயின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிவித்துள்ள அவர், உங்கள் மாவட்டம் அல்லது நகரத்தில் எந்த வகையான தேர்தல் பிரசாரத்திற்கும் டிஜிட்டல் திரை பயன்படுத்தப்பட்டால், தயவு செய்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவிக்கவும்.

அதன் பின்னர், அது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

இது முற்றிலும் சட்ட விரோதமான செயல்.

விளம்பரங்களுக்கு பணம் செலுத்துவது அல்லது காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஏனெனில் இது பொது இடத்தில் போஸ்டர் ஒட்டுவதற்கு சமம்.

எனவே, டிஜிட்டல் திரையில் விளம்பரங்களை ஒளிபரப்புவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல்களின் போது, நீதிமன்ற தீர்ப்புகள் இந்த நிலைப்பாட்டை வலுப்படுத்தியதாகவும் தேவையானால் நீதிமன்றத்தை அணுகுவதற்கு அதிகாரிகள் உத்தேசித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.பி. எல் தொடர்; 'கிரீன் சிக்னல்' கொடுத்த டோனி

## உற்சாகத்தில் ரசிகர்கள்



ரசிகர்களால் 'தல' என அன்புடன் அழைக்கப்படும் சென்னை அணியின் நம்பிக்கை நட்சத்திரமான டோனி 2025ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்புதான் தற்போதுவரை நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ஐபிஎல்லில் விளையாடுவது குறித்து டோனியே, கிரீன் சிக்னல் கொடுத்துள்ளார். விளம்பர நிகழ்ச்சியில் கலந்து கொண்ட டோனி, இதுகுறித்து மௌனம் கலைத்தார். அப்போது அவர், "எனது கடைசி சில வருட கிரிக்கெட்டை முடிந்தளவு கொண்டாட்டத்துடன் விளையாட நினைக்கிறேன்.

9 மாதங்களுக்கு நான் என்னை உடற்தகுதியுடன் வைத்துக் கொள்ள வேண்டும். அதன்மூலம் இரண்டு மாதங்கள் நான் ஐபிஎல் தொடரில் நன்றாக விளையாடலாம். இது குறித்து நான் முடிவெடுக்க வேண்டும். இருப்பினும் நிதானமும் வேண்டும். இப்போது சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாததால், ஒவ்வோர் ஆட்டத்தையும் ஆர்வத்துடன் பார்க்கிறேன். ஒரு பார்வையாளனாக என் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. நான் களத்தில் இருக்கும்போது, என் இதயத் துடிப்பு அப்படி இருக்காது, ஆனால் ஒரு ரசிகனாக அது வித்தியாசமானது தான்" என்றார்.

ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் 10 அணிகளும் தங்களின் தக்க வைப்பு வீரர்கள் பட்டியலை அறிவிக்க வேண்டும். இந்த நிலையில்தான் டோனி தற்போது இப்படி பேசியுள்ளார் என்பதால் அவரது ரசிகர்கள் உற்சாகமடைந்துள்ளனர். (நி-8)

## றொனால்டோவை பார்க்க சீனாவிலிருந்து சைக்கிளில் வந்த ரசிகர்




உலகளாவிய ரசிகர் பட்டாளத்தை கொண்ட புகழ்பெற்ற கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, அண்மையில் 24 வயதான காங் என்ற தீவிர ரசிகரை சந்தித்தார்.

காங் என்ற நபர் சீனாவிலிருந்து சவுதி அரேபியாவுக்கு ஏழு மாதங்கள் சைக்கிளில் பயணம் மேற்கொண்டு கிறிஸ்டியானோ றொனால்டோவை சந்தித்துள்ளார்.

கடந்த மார்ச் 18 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து புறப்பட்ட காங், ஒக்டோபர் 20 ஆம் திகதி சவுதி அரேபியாவின் அல் நாசர் கால்பந்து கழகத்தை வந்தடைந்தார் என்று சவுத் சைனா மார்னிங் போஸ்ட் தெரிவித்துள்ளது.

அவர்களின் சந்திப்பின் போது, றொனால்டோ காங்கின் சட்டையில் கையெழுத்திட்டு அவருடன் பல புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டார். (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3250

Search for people, places and things

### ராகவி




### விதுசனா




### மதுரா




### சதுர்யன்




### ஜீனோயன்




### ரிஷாந்த்

மாமியார்: உனக்கு சமைக்க தெரியாதுன்னு
நீ சொன்னதை கூட மன்னிச்சு விட்டிருவேன் டி
ஆனா, பால சிம்ல வைன்னு சொன்னவுடனேயே
சிம்] லயா, சிம் உலயா ன்னு
கேட்டா பாரு!
அதைத்தான் என்னால மன்னிக்கவே முடியாது டி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல்-2024

யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



பாசமிகு அரச அலுவலர்களே!
அதிபர், ஆசிரியர்களே!
உங்கள் அஞ்சல்
வாக்குகளை அளியுங்கள்
ஆமைச் சின்னத்திற்கு!



சுயேட்சைக் குழு- 12



X 2

N.P.ஸ்ரீந்திரன்
B.A (Hons)M.A.Dip.in.Edu
Dip.in.Public Law,
சைவப்புலவர்,
முதன்மை வேட்பாளர்

ஏன்? நீங்கள் ஆமைச்சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்...

1. ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக 32 ஆண்டுகள் சைவ மக்களிற்கு செய்த சேவைக்காக...
2. வடமாகாண இலங்கை ஆசிரிய சங்கச் செயலாளராக, வட மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கச் செயலாளராக சேவை செய்தமைக்காக...
3. அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியராக, சிவசேனைச் சிவத் தொண்டராக, இந்து ஸ்வயம் சேவா சங்கப் பணியாளராக சமூக, சமயப் பணி செய்தமைக்காக...
4. கொரோனாக் காலத்தில் ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கியமைக்காக...
5. பத்திரிகைத் துறையில் பிரதேச செய்தியாளராகப் பணிபுரிந்து சமூக நீதி, நியாயத்திற்காக குரல் கொடுத்தமைக்காக...
6. கவிஞனாக எழுத்தாளனாக, சமயச் சொற் பொழிவாளனாக தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய பணிக்காக...
7. எழுபத்து மூன்று வருடங்களின் பின், சைவத் தமிழ்த்தேசிய மீள்கட்டுருவாக்கச் செயற்பாட்டினை ஆரம்பித்தமைக்காக...
8. போலித் தமிழ்த் தேசியத்திற்குள் பிரிந்து நிற்கும் சைவத் தமிழ்த் தேசிய மக்களை ஐக்கியப்படுத்துவதற்காக...

வெல்லும் சைவத் தமிழ்த் தேசியம்.

(025)

நாளை நமதே... 077 960 3001



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
## பாராளுமன்ற தேர்தல் 2024

### தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடல்

எமது ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் தீப ஒளித்திருநாள், **தீபாவளி** அன்று **(வியாழக்கிழமை, ஐப்பசி 31)** யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் உள்ள ஐந்து இடங்களில் வெளியிடப்பட இருக்கின்றது.

| பகுதி | நேரம் | இடம் |
|---|---|---|
| காரைநகர் | காலை 8 மணி | வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் முன்பாக |
| யாழ்ப்பாணம் | காலை 10 மணி | நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக |
| வடமராட்சி | பிற்பகல் 1 மணி | பொற்பதி புனித இராஜப்பர் ஆலயம் முன்பாக |
| தென்மராட்சி | மாலை 3 மணி | சாவகச்சேரி நகர பேருந்து நிலையம் முன்பாக |
| கிளிநொச்சி | மாலை 6 மணி | கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக |

நீதி மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, நமது சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கின்றோம். மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட எங்கள் கொள்கைகள் மற்றும் திட்டங்கள், எதிர்கால தலைமுறைக்கான உறுதிப்பாடுகளை உள்ளடக்குகிறது.

உங்கள் ஆதரவு, எங்களின் முயற்சிகள் வெற்றியடைய வழிகாட்டும் ஒளியாகும்!

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

### மாற்றத்திற்கான நம்பிக்கை...

சுயேச்சைக் குழு --2

ஊஞ்சல் சின்னம்



4

E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)



களத்தில் கமல்
2024 எமக்கான நேரம்

(026)


# கடவுச்சீட்டை வழங்குவதில் சிக்கல்

## அரசாங்கத்தின் அறிவிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய தேவைகளுக்காகக் கடவுச்சீட்டு தேவைப்படுகின்றவர்கள் மாத்திரம் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கான வெற்றுப் புத்தகங்களின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் இது அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. இது கட்டம் கட்டமாகவே இலங்கைக்குக் கிடைக்கிறது. இதனால் கடவுச்சீட்டுகளை வழங்குவதில் சிக்கல் உள்ளது.

எனவே அத்தியாவசியமான தேவை உடையவர்கள் மாத்திரம் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார். (நி-8)




# இராசிபலன்

30.10.2024
ஐப்பசி 13, புதன்கிழமை
திரயோதசி பிற்பகல் 2.21 மணிவரை

அத்தம் முன்னிரவு 11.11 மணிவரை
சுபநேரம்4.33-6.03 மணிவரை
இராகுகாலம்-12.03-1.33 மணிவரை

சந்திராஷ்டமம்:
அவிட்டம்,சதயம்.

வளவன்

**மேஷம்**
கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், உற்சாகமான நாள்.

**கடகம்**
வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,நேற்றைய பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்**
புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் வெற்றிபெற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், தொழில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை.

**மகரம்**
மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**
பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்**
ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒற்றுமை கூடும்.

**கும்பம்**
மற்றவர்களுடன் பேசும் போது நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவேண்டிய கடன் பாக்கிகள் வராமல் தாமதமாகலாம்.

**மிதுனம்**
பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**
குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு**
எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடரும் எண்ணம் உருவாகும்.

**மீனம்**
விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், சொந்தபந்தங்களின் வருகையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

உன்னால் முடிந்ததை எல்லாம் செய்துவிட்டு பிறகு இறைவனிடம் உதவி கேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளித் திருநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளித் திருநாள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வைச வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறைப் பேராசிரியர் கந்தையா ஸ்ரீ கணேசன் கலந்துகொள்ளவுள்ளார். (நி-8)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் எதிர்வரும் நவம்பர் மாதம் 2, 3 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு மைதானத்தில் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டிக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்த கழகங்கள், பதிவு செய்யப்படாத கழகங்கள் தமது பதிவினை மேற்கொண்டு இப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.

எனவே தங்களது கழக விண்ணப்பங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

அத்துடன் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு போட்டி நிரல் தயாரிக்கப்படுவதனால் தங்களது கழகத் தலைவர் அல்லது அணித் தலைவர் தவறாது பங்கு பற்ற வேண்டும் என யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-8)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஆறுமுகம் புண்ணியமூர்த்தி கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஜமுனா இராஜசீலன், யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் திருமதி. புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை, வலிகாமம் வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நடராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

## வட்டுக்கோட்டையில் கார்- மோ.சைக்கிள் விபத்து- ஒருவர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையில் இடம் பெற்ற கார் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வட் டுக்கோட்டை, சங்கரத்தையில் காரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து விசாரணைகளை வட்டுக் கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## சர்வதேச சதுரங்க போட்டியில் சாதிக்கும் மாணவி கஜிஷனா




(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 2 இல் கல்வி கற்கும் தர்ஷன் கஜிஷனா என்ற மாணவி தேசிய, சர்வதேச சதுரங்க போட்டிகளில் சாதித்து வருகிறார்.

உலக சதுரங்க அமைப்பினால் (FIDE) கடைசியாக வெளியிடப்பட்ட தர வரிசையின் அடிப்படையில் Rapid சதுரங்க போட்டியில் (15minutes +10 seconds ) 1623 புள்ளிகளைப் பெற்று 7 வயதிற்குட்பட்ட பிரிவில் உலகளாவிய ரீதியில் 4 ஆம் இடத்தை பெற்று எமது நாட்டிற்கும் அத்துடன் வட மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். (நி-8)

## கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் புலமைப் பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா 20,000.00 வீதம் புலமைப் பரிசில்கள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜீவனோபாயமாக விவசாயத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் பெற்றோரில் ஒருவராவது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏதாவது கமக்கார அமைப்பில் உறுப்பினராகவும் இருப்பதுடன் 2022, 2023, 2024 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து முறையே 2024, 2025, 2026 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவராக இருத்தல் வேண்டும். அதன் பிரகாரம் அத்தகைய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமக்குரிய கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று, பெற்றோர் அங்கத்தவராகவுள்ள கமக்கார அமைப்பு, தங்களது பிரிவிற்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் தரம், கல்வி கற்கும் பாடசாலை அதிபர் என்பவர்களது சிபாரிசுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பத்தை உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் 2024. 11.22 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கையளிக்கும்படி யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் விண்ணப்பதாரியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறு, குடும்ப வருமானம், மீள் குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு கமநல சேவைகள் நிலையப்பிரிவு மட்டத்தில் தெரிவு இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-8)

## தேர்தல்களம்

## ஜே.வி.பியை ஆதரிப்பது மடமைத்தனமானது

### மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் ஐங்கரநேசன்



தமிழர்கள் மீது தீராப்பகை கொண்ட ஜே.வி.பியை தமிழ் மக்களே ஆதரிப்பது அரசியல் மடமைத்தனமாகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயகத்தின் தலைவரும் ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் பொ. ஐங்கரநேசன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவிலில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்திய - இலங்கை ஒப்பந்த காலப்பகுதியில் அதனை ஆதரித்தமைக்காக சந்திரிகா அம்மையாரின் கணவர் விஜயகுமாரதுங்காவின் ஆதரவாளர்கள் பலரையும் விக்கிரமபாகு கருணரட்னவின் ஆதரவாளர்கள் பலரையும் தம் இனம் என்றும் பாராமல் சுட்டுக் கொன்றவர்கள் இவர்கள் தான்.

தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் துண்டாடியவர்கள் இவர்கள். விடுதலைப் புலிகளை அழித்ததில் அமெரிக்காவின் பங்களிப்புக்காக அமெரிக்கத் தூதரகம் சென்று கைகுலுக்கியவர்களும் இவர்கள் தான்.

ஜே.வி.பி இப்போது தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகமூடியுடன் தேர்தல் அரசியலில் ஈடுபட்டுவருகிறது. ஜனாதிபதித் தேர்தலின் போது ராஜபக்ஷக்களின் மீதும் ரணில் தரப்பின் மீதும் சிங்கள மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பு தென்னிலங்கையில் அரசியல் தலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அந்த மாற்றம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரப் போவதில்லை. சிலர் தமிழ்க் கட்சிகளின் மீது கொண்டிருக்கும் வெறுப்புக் காரணமாக ஜே.வி.பியை ஆதரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர் பதவிக்காகத் தமிழ் மக்களை ஜே.வி.பியிடம் அடகு வைப்பதற்கும் சிலர் தயாராக இருக்கிறார்கள். தமிழ் மக்கள் இதனைப் புரிந்து கொண்டு ஜே.வி.பியை வடக்கு கிழக்கில் முற்றாக நிராகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-8)

## சைவத்தின் மீளுருவாக்கத்திற்கு அரசியல் பலம் அவசியம் தேவை

### ஆமைச் சின்னத்தில் போட்டியிடும் ஸ்ரீந்திரன்



போலித் தமிழ்தேசியவாதிகளிடமிருந்து தூய சைவத் தமிழ் தேசியத்தை மீள்கட்டுருவாக்கம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.

அதற்கு ஒரு களமாக 2024 பாராளுமன்ற பொதுத் தேர்தல் அரிய பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. என யாழ்.தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு 12 இல் ஆமைச் சின்னத்தில் போட்டியிடும் என்.பி.ஸ்ரீந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை காலமும் மத அரசியலே ஏனைய மதத்தவர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்ததென்பதை எம்மவர் புரிந்து கொள்ளவில்லை.

பௌத்தபீடம் சிங்கள மக்களின் அரசியலை தீர்மானிக்கிறது. இஸ்லாமிய மௌலவிமார் முஸ்லீம்களின் அரசியலை தீர்மானிக்கின்றனர். கிறிஸ்தவ மக்களின் அரசியலை ஆயர்கள் தீர்மானிக்கின்றனர். சைவத் தமிழ் தேசிய மக்களின் அரசியலை யார் தீர்மானிக்கிறார்கள்?

எனவே எமது சைவ சமயத்தின் மீள்கட்டுருவாக்கத்திற்கு அரசியல் பலமும் ஆன்மீக பலமும் அவசியம் தேவைப்படுவதால் நாம் தேர்தல் களத்தில் அந்த பலத்தைப் பெறுவதற்காக சிவன் ஆணைப்படி இறங்கியுள்ளோம் .

சைவத்தமிழின் மீள் எழுச்சிக்கு ஆதரவு தாருங்கள். அரசியல் ஆன்மீக பலத்தால் சைவ தமிழ் தேசியத்தை பாதுகாப்போம், நிலை நிறுத்துவோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண சபை
## 2025 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வட மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உப அலுவலகங்களுக்கு 2025 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் நிர்மாண தாரர்கள் மற்றும் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **2024 டிசம்பர் மாதம் 06 ஆம்** திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்படிவங்கள் மற்றும் விபரங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து அல்லது யாழ்ப்பாணத்தில் **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.** எனும் முகவரியில் இயங்குகின்ற மாகாணத் திறைசேரி அலுவலகத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலுள்ள நிதிக்கிளைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம். அவர்களுடன் தொலைபேசி இல. 021 221 3540 மூலம் தொடர்பு கொள்ளவும்.

**இ.இளங்கோவன்,**
**பிரதம செயலாளர், வட மாகாண சபை,**
**மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி,யாழ்ப்பாணம்.**

(சி-1472)

## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: பரணி
8 இல் செவ்
உயரம் : 5'10"
தகைமை/தொழில்: A/L, போசாக்கு ஆலோசகர் (pvt)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14893

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: பூரம்
9இல் சூரி செவ்
கி.பா-44
உயரம்:6'
தகைமை/ தொழில்: A/L,இத்தாலி
எதிர்பார்ப்பு: இத்தாலி PR
தொ.இ: B/14894

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 2
உயரம் :5'4"
தகைமை/தொழில்: A/L. விவசாயம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14897

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம் : சதயம்
10 இல் சூரி செவ்
உயரம் : 5'10"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/14817

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
3 இல் சூரி செவ்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: Bsc, Software Engineer (எழுத்து எழுதி குழம்பி விட்டது)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14818

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
8இல் செவ்
கி.பா: 63
உயரம் :5'4"
தகைமை/தொழில்:Bsc , Temporary Assistant Lecturer
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: G/14819

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**

## தவறிவிட்டது

BIN-5979 இலக்க மோட்டார் சைக்கிளின் பின்பக்க இலக்கத்தகடு திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும். (2528)

தொடர்புகளுக்கு-
**077 674 6733**

## லங்கா மஹால் (PVT) LTD

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974** (490)

## விசேட பொதுக்கூட்டம்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமானது எதிர்வரும் 2024.11.03 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. எனவே. குறித்த சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்களை குறித்த விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை,**
**தெல்லிப்பளை.**

(சி-1474)

## University of Jaffna, Sri Lanka
### Faculty of Graduate Studies

The Faculty of Graduate Studies, University of Jaffna invites applications from eligible candidates for the following Postgraduate Programmes.

1. Master of Tamil (Batch X)
2. Master of Public Administration (Batch IV)
3. Master of Regional Planning (Batch IV)

Closing date of the applications: **29.11.2024**

Please visit our Website (www.grad.jfn.ac.lk) for more details regarding the required qualifications and fees.

Contact us on 021 222 3608 for any clarifications.

**Registrar** (C-1470)

## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம்- யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவைமையங்களில் 31.08.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 11.11.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப் படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் 12.11.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம். சாவகச்சேரி, வல்வெட்டித் துறை, யாழ்/பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை. உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி. கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601: 021-222 2602

(சி-1471)

PEOPLE'S BANK
Pride of the Nation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விமான வெடிகுண்டு அச்சுறுத்தல்; 400 போலி அழைப்புக்கள்

### பாதுகாப்பை அதிகரித்தது இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு




(டில்லி)

விமான அச்சுறுத்தல் அழைப்புகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் பின்னணியில், இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு நாடு முழுவதும் அதன் பாதுகாப்பு முயற்சிகளை அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், 400இற்கும் மேற்பட்ட போலி அழைப்புகளைப் பெற்றதாக இந்திய பாதுகாப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்த அழைப்புகள் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பிற்கான சாத்தியமான அச்சுறுத்தல் குறித்து கவலைகளை அதிகரித்தது.

அதிகரித்து வரும் இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, NIA இன் சைபர் பிரிவு வெளிநாட்டு அச்சுறுத்தல் அழைப்புகள் பற்றிய விரிவான பகுப்பாய்வைத் தொடங்கியுள்ளது.

இந்த விசாரணையானது இந்த அழைப்புகளுக்குப் பின்னால் உள்ள நோக்கங்களைக் கண்டறிவதிலும் அவற்றின் நம்பகத் தன்மையை மதிப்பிடுவதிலும் கவனம் செலுத்துகிறது. (நி-8)

# ஐ. நா அமை[ப்...]

# இஸ்ரேலிய பாராளு[...]

(ஜெருசலேம்)

**ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரணம் மற்றும் பணி நிறுவனம் இஸ்ரேலியப் பகுதியிலும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் செயற்படுவதைத் தடை செய்வதற்கான சர்ச்சைக்குரிய சட்ட மூலத்துக்கு இஸ்ரேலிய பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.**

வாக்கெடுப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை 92-10 என்ற கணக்கில் நிறைவேற்றப்பட்டது. மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள காஸாவில் மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்து உதவிப் பொருட்களை அனுமதிக்க இஸ்ரேல் அதிக அழுத்தத்தில் இருக்கும் தருணத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள இந்த சட்டம் ஏற்கனவே பலவீனமான உதவி விநியோக செயல்முறையை பாதிக்கும் எனக் கூறப்படுகிறது.

அதேநேரம் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேம் உட்பட மேற்குக் கரை மற்றும் காஸா போன்ற பகுதிகளில் உள்ள UNRWA இன் வளாகத்தை மூடுவதற்கு இந்தச் சட்டம் வழி வகுக்கும்.

இந்த சட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐ.நா.வின் பொதுச் செயலாளர்

அ[...] ெ[...] மே[...] ஒ[...] அ[...] பி[...] ெ[...] வி[...] வி[...]

# அமெரிக்காவில் வாக்குப் பெட்டிகளுக்கு தீ வைப்பு வாக்குகள் எரிந்து நாசம்- தேர்தலில் பரபரப்பு

(வோஷிங்டன்)

போர்ட்லாண்ட் பகுதியில் உள்ள 2 வாக்குப் பெட்டிகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. இரண்டு சம்பவங்களும் ஒரே மாதிரியாக நடந்துள்ளன.

அமெரிக்காவில் வரும் நவம்பர் 5 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹாரிசும் குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப்பும் களத்தில் உள்ளனர்.

இந்நிலையில் சிறப்புரிமை மூலம் தபால் ஓட்டு உள்ளிட்ட முன்கூட்டியே வாக்களிக்கும் நடைமுறைகளின்படி ஏற்கனவே கணிசமான அளவு வாக்குகள் பதிவாகி வருகின்றன.

அதன்படி ஜனாதிபதி ஜோ பைடனும் தனது வாக்கினை செலுத்தினார். இந்நிலையில் வாக்குகளுடன் கூடிய வாக்குப் பெட்டிகள் மர்ம நபர்களால் எரிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




ஒரேகான் மாகாணத்தில் உள்ள போர்ட்லாண்ட் பகுதியில் உள்ள 2 வாக்குப் பெட்டிகளுக்கு தீவைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தலைநகர் வோஷிங்டன் மாகாணத்தில் உள்ள வான் கூவர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குப் பெட்டிகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

இரு சம்பவங்களிலும் தீயணைத்துப்புத்துறை துரிதமாக செயற்பட்டு தீயை அணைத்திருப்பினும் உள்ளே இருந்த நூற்றுக் கணக்கான வாக்குச்சீட்டுகள் தீயில் புகைந்து சேதமடைந்தன. இதனால் சொற்ப வாக்குச் சீட்டுகளை மட்டுமே சேதமின்றி மீட்க முடிந்தது.

இதனையடுத்து இந்த சம்பவங்கள் குறித்து எப்.பி.ஐ. விசாரித்து வருகிறது. இரண்டு சம்பவங்களும் ஒரே மாதிரியாக நடந்துள்ளதால் இதை செய்தது ஒரே கும்பலா என்ற கோணத்தில் விசாரணை தொடங்கியுள்ளது.

இதற்கிடையே செலுத்தப்பட்ட வாக்குகளை மீண்டும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் தேர்தல் நேர வன்முறை கண்டிக்கத்தக்கது என்றும் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## தென் கொரியாவின் 'ட[...] வடகொரியாவுக்குள் உ[...]



(பியாங்யாங்)

தென்கொரியா தனது வான்பரப்பிற்குள் ஆளில்லா விமானங்களை மூன்று முறை அனுப்பியதாக அணு ஆயுதம் கொண்ட வடகொரியா குற்றம் சாட்டியது.எனினும் இந்தக் குற்றச்சாட்டை தென் கொரியா மறுத்துள்ளது.

வட கொரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் விபத்துக்குள்ளான "எதிரி ஆளில்லா விமானத்தின்" பாகங்களை மீட்டதாகக் கூறியுள்ளது.

வடெ[...] செய்திச்[...] KCNA [...] யிட்ட [...] பியாங்ய[...] துக்குள்[...] ஆளில்[...] களை எ[...] றன.

தென் [...] கள் இந்[...] ந்தது மூ[...] கொரியா[...] யில் நுல[...] சாட்டிய[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பிற்கு தடை!

# ளுமன்றம் ஒப்புதல்

ம்
ப்
ள
ட
ட
ம்




ர
தி
A
வ
ழி
ரு
ா.
ர்

அன்டோனியோ குட்டெரெஸ், இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலைத் தீர்ப்பதற்கும், ஒட்டுமொத்த பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கும் இந்தச் சட்டங்களைச் செயற்படுத்துவது தீங்கு விளைவிக்கும் எனத் தெரிவித்தார்

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகள் இந்த நடவடிக்கை குறித்து தீவிர கவலை தெரிவித்துள்ளன. UNRWA என்பது காசாவில் மனிதாபிமான உதவிகளை நடத்தும் ஐ.நா.வின் முன்னணி நிறுவனமாகும். இது ஒரு வருடத்திற்கும் மேலாக இஸ்ரேலின் போரினால் பேரழிவிற்குள்ளானது.

இஸ்ரேலிய தாக்குதல்களில் நூற்றுக் கணக்கான UNRWA தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

## ஆசியாவில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் பழைமையான பிரமிட்

### ஆச்சரியத்தில் ஆய்வாளர்கள்



உலகின் மிகப் பழைமையான பிரமிட் ஆசியாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளியான தகவல்களால் தொல்லியல் நிபுணர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கி.மு 2630 இல் கெய்ரோவில் கட்டப்பட்ட பின்னர், எகிப்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற Dsjojer ஸ்டெப் பிரமிட் தற்போது உலகின் மிகப் பழமையானது என உலக சாதனை படைத்துள்ளது.

இந்த பிரமிட்டானது, பண்டைய வடமேற்கு மெம்பிஸின் முக்கிய நெக்ரோபோலிஸான சக்காராவில் அமைந்துள்ளது. இது இதுவரை கட்டப்பட்ட முதல் பிரமிட் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

பலர் இது 27 ஆம் நூற்றாண்டில் மூன்றாம் வம்சத்தின் போது பார்வோன் ஜோசரை அடக்கம் செய்வதற்காக கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர்.

கடந்த ஒக்டோபரில் வெளியிடப்பட்ட ஒரு அறிவியல் ஆய்வறிக்கை, எகிப்திய பிரமிட்களுக்கு முன்குனுங் படாங் வந்ததாகவும், குறைந்தது 9,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகவும் கூறுகிறது.

தொல்பொருள் ஆய்வு கூட சில கட்டமைப்புகள் 25,000 ஆண்டுகள் பழைமையானதாக இருக்கலாம் என்று கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ன் 'ட்ரோன்கள்' தள் ஊடுருவல்



வடகொரிய அரச செய்திச் சேவையான KCNA யினால் வெளியிட்ட புகைப்படங்கள் பியாங்யாங்கில் விபத்துக்குள்ளான சியோலின் ஆளில்லா விமானங்களை எடுத்துக்காட்டுகின்றன.

தென் கொரிய ட்ரோன்கள் இந்த மாதத்தில் குறைந்தது மூன்று முறை வட கொரியாவின் வான் வெளியில் நுழைந்ததா குற்றம் சாட்டப்படுகிறது. (நி-8)

# அபுதாபி இந்துக் கோவிலில் தீபாவளி கொண்டாட்டம்

(அபுதாபி)

டுபாய்-அபுதாபி ஷேக் ஜாயித் சாலையில் உள்ள அல் முரக்கா பகுதியில் பி.ஏ.பி.எஸ். அமைப்பு சார்பில் பல்வேறு வசதிகளுடன் ரூ.700 கோடியில் 27 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட இந்து கோவில் அமைக்கப்பட்டுள்ளது. கோவில் மட்டும் தரைத்தளத்துடன் சேர்ந்து 2 தளங்களாக 55 ஆயிரம் சதுர அடியில் அமைந்துள்ளது.

இந்த கோவிலை அமீரகத்துக்கு 2 நாட்கள் சுற்றுப்பயணமாக வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி திறந்து வைத்தார். பின்னர் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் பொது மக்கள் வழிபட அனுமதிக்கப் பட்டது.

இந்தக் கோவிலில் இந்துக்களின் முக்கிய தினங்களில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்துக்களின் முக்கிய திருவிழாவான தீபாவளி பண்டிகையையொட்டி நேற்று முதல் அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கிறது.

இந்தியாவின் வட மாநிலங்களில் அன்னகூத் என்ற பெயரில் உணவு மலைத்திருவிழாவானது ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இதில் இந்து கடவுளான கிருஷ்ணருக்கு மலைபோல உணவு வகைகளை குவித்து வைத்து வழிபடுவது வழக்கம். பாகவத புராணத்தில் பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் கனமழையில் பாதிக்கப்பட்ட போது கோவர்த்தன மலையை கிருஷ்ணர் தூக்கி ஊர் மக்களுக்கு குடையாக வைத்து காப்பாற்றியதாக கூறப்பட்டுள்ளது. எனவே தான் அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் [illegible] வழிபடுவது வழக்கம்.



இந்த திருவிழா வழக்கமாக தீபாவளி பண்டிகை முடிந்த 4ஆவது நாளில் வெகு விமரிசையாக கொண்டாடப்படும். இதனையொட்டி பாப்ஸ் அமைப்பு அபுதாபி இந்துக் கோவில் கட்டப்படும் வளாகத்தில் இந்த பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், சைவ உணவுகள் மட்டும் வைக்கப்படும். இதற்காக மொத்தம் 1,100 வகையிலான உணவுகள் பார்வைக்கும் வைத்து, பூஜைகள் செய்யப்படும். அபுதாபி இந்துக் கோவிலில் அன்னகூத் சிறப்பு நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடக்கும்.

மேலும் தீபாவளி பண்டிகைக்கு அபுதாபி இந்து கோவிலுக்கு அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் வருகை தரக்கூடும் என்பதால் அதற்கு தேவையான அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறை

## நிவர்த்தி செய்யுமாறு வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியாவில் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யக் கோரி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

செட்டிக்குளம், அரசடிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் தரம் 3 ஆம் வகுப்புக்கான ஆசிரியரை கடந்த 10 மாதங்களாக நியமிக்கப்படாமையால் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளதாகத் தெரிவித்து இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய், வேண்டும் வேண்டும் ஆசிரியர் வேண்டும், வலயமே கண் கொண்டு திரும்பிப்பார் போன்ற பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி-6)

# இலவச வை-பை

## பயன்படுத்தும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

### கணனி அவசர பதிலளிப்பு பிரிவு

(கொழும்பு)

பொது இடங்களில் இலவச வை-பை பயன்படுத்தும் போது மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என இலங்கை கணினி அவசரப் பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அவ்வாறான இடங்களில் வை-பை பயன்படுத்தும் போது தனிப்பட்ட தகவல்கள் திருடப்படுவது தொடர்பாக தனது பிரிவிற்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த தெரிவித்துள்ளார்.

எனவே பொது இடங்களில் இலவச வை-பையை பயன்படுத்தி இணையப் பணிகளில் ஈடுபடும் போது அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 400 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 | 400 |
| தக்காளி | 300 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 220 | 240 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 300 |
| கரட் | 200 | 200 | 250 | 250 |
| பூசணி | 100 | 80 | 280 | 120. |
| புடோல் | 200 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 180 | 100 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 250 | 300 |
| பாகற்காய் | 450 | 550 | 450 | 800 |
| வெண்டக்காய் | 200 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 180 | 350 |
| லீக்ஸ் | 320 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 120 | 180 | 200 |
| கறிமிளகாய் | 650 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 350 | 200 | 150 | 200 |
| போஞ்சி | 350 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 400 | 550 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 150 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 1000 |
| வெங்காயப்பூ | 450 | 450 | 400 | 450 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 60 |
| ஈரப்பலா | 150 | -- | 60 | 200 |

# இன்று ஒரு தகவல் 254



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## தனக்காக வாழ்க!

இதோ இருக்கின்றாரே சார். இவர் மற்றவர்களுக்காக தன்னையே தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றார்.

அப்படி என்று யாராவது சொன்னால் அது ஏமாற்று வேலை என்கின்றார் ஒரு பெரியவர். உங்களை நீங்கள் முதலில் கவனியுங்கள் சார்.

தனக்காக சேவை செய்து கொள்வது தான் உலக இயல்பு. இன்னொருவருக்கு சேவை செய்வதே நோக்கம் என்று யாரும் இயங்க முடியாது.

இதுவரைக்கும் எந்த மனிதனும் தனக்கென்று வாழாமல் இருந்தது கிடையாது. தனக்காக வாழ்வதிலே இரண்டு வகை உண்டு. ஒருவகை எப்படி என்றால் தன்னுடைய நலனுக்காக மற்றவர்கள் நலனை அழிப்பதைத் தவிர்க்க முடியாமல் போவது.

இன்னொருவகை எப்படி என்றால் தனக்காக வாழ்வதிலே மற்றவர்களுக்கு பல நல்ல பயன்கள் ஏற்படலாம்.

இந்த இரண்டாவது வகையிலே தன்னுடைய நலன்களைப் பாதுகாத்து வளர்ச்சியடைகின்றது தான் நல்லது.

தனக்காக வாழ்வது என்பது மனித இயற்கை. இப்படிச் சொல்வது தவறாகத் தெரியலாம். பண்பாடு அற்றதாகவும் தோன்றலாம். ஆனால் உண்மை அது தான்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றார் அவர். ஓடுகின்ற வெள்ளத்திலே ஒருவன் விழுந்து விட்டான் சார்.

அவனைக் காப்பாற்றுவதற்காக ஓடுகின்ற அடுத்தவன் கூட அடிப்படையிலே பார்த்தால் தனக்கே ஒரு சேவையைத் தான் செய்திருக்கின்றான். எப்படி தெரியுமா?

அவன் தண்ணீரிலே விழுந்தவுடனே இவன் மனதிலே ஒரு துன்பம். ஒரு கஷ்டம் ஏற்படுகின்றது. அந்த துன்பத்தை போக்குவதற்காகவே இவனும் வெள்ளத்திலே குதிக்கின்றான். அடுத்தவனைக் காப்பாற்றத்தான்.

சமூக அமைப்பே நாம் யாரையும் யாருக்காகவும் தியாகம் செய்யச் சொல்ல தேவையில்லாத தன்மையில் இருக்கவேண்டுமாம்.

தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்குத் தான் ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்றான். அப்படி பிறக்கின்ற மனிதன் தன்னுடைய நன்மைக்கான செயற்பாடுகளிலே ஈடுபடுவது நல்லது தான். அது ஒன்றும் பாவமில்லை. இப்படி இருக்கின்றபோது தனக்காக வாழும்படி யாரும் போதனை செய்வதில்லை.

இந்த சமுதாயத்திற்காக வாழ். மனித குலத்திற்காக வாழ். அப்படி இப்படி என்று எல்லாம் சொல்லி போதனை செய்வதனாலே போலித்தன்மை தான் ஏற்படுகின்றது என்கின்றார் அவர்.

தனக்காக வாழுவதே கொஞ்சம் ஆழமான நிலையிலே மற்றவர்களுக்கு சேவை செய்வதாக ஆகலாம். இன்னொரு விடயம்.

மற்றவர்களுக்களைப் பார்த்து அவர்கள் மாதிரியே ஆக வேண்டும் என்று முயற்சி செய்யக் கூடாது. மற்றவர்கள் மாதிரி ஆகின்ற முயற்சியிலே உங்களை நீங்கள் இழந்து விடுவீர்கள். இதனாலே நீங்கள் தானாக அடையக்கூடிய வளர்ச்சியை அடையாமல் தவற விட்டு விடுவீர்கள்.

நீங்கள் எந்த அளவிற்கு முன்னேற முடியுமோ அதை முழுமையாக அடைவது தான் உங்கள் இலட்சியமாக இருக்க வேண்டும். இதெல்லாம் ஒரு பெரியவருடைய சிந்தனை.

இதைக் கேட்டதும் எல்லோரும் சுயநலவாதியாக மாறுங்கள் என்று நினைத்துவிடக்கூடாது. சுயநலம் என்கின்ற வார்த்தைக்கு நாம் இப்போது வைத்திருக்கின்ற அர்த்தம் வேறு.

ஒரு பெரிய பங்களா. அதற்கு முன்னாலே ஒரு பெரிய ஆள். பெரிய மியூசிக் பார்டியோடு நின்று கொண்டிருந்தார்.

Happy Birthday to you என்று பாடிக்கொண்டிருந்தான். யாருக்காக இப்படி இங்கே நின்று பிறந்த நாள் வாழ்த்து பாடிக்கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார். அந்த வழியாக போன ஒரு வெளியூர் ஆள்.

இந்த பங்களாவினுடைய சொந்தக்காரருக்கு இன்றைக்கு பிறந்த நாள். அதற்காகத் தான் இப்படி செய்கின்றோம் என்றார் அந்த ஆள்.

என்ன இது? இந்த பெரிய மனிதனுக்கு கொஞ்சம் கூட மரியாதையே தெரியவில்லை. நீங்கள் இவ்வளவு ஆர்வமாக இங்கே வாழ்த்துப் பாடுறீர்கள்.

அந்த ஆள் ஜன்னலையாவது திறந்து இதைப்பார்த்து இரசிக்க வேண்டாமா? என்றார் வெளியூர் ஆள்.

இதற்கு அந்த ஆள் விபரம் தெரியாமல் பேசாதே. நானே இரண்டு இடத்திலே எப்படி இருக்க முடியும். நான் தான் அந்த பெரிய மனிதன் என்றார்.

தனக்காக வாழ்வதிலே இது ஒரு தனி ரகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவுசெய்தல்-2025

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2025ஆம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000.00 எமது அலுவலக காசாளரிடம் செலுத்தி அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, வங்கி கணக்கிற்கு (7040260 Boc Jaffna branch) வைப்பு செய்து விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல்-2025"எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 30.11.2024ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ் போதனா வைத்தியசாலை மின்னஞ்சலில் **www.thjaffna.lk** பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொதுப்பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுதுபொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதிபண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTVகமராக்கள், ரோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள், நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், லொஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், திராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, தரை துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லாவிதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணிதுவைக்கும் தூள், பார் சவர்க்காரம், சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை, தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுரெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய் |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதியினர், சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாளஅட்டை மற்றும் பெயர்ப் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலகஉபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம்,புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக் குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |
| C - 13 | கழிவுகளை அகற்றுதல் தொடர்பான சேவை |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிடநிர்மாணம், கட்டிடபுனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E-03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

**விதிமுறையும் நிபந்தனைகளும்:**

01. வழங்கல்கள், சேவைகள் 2025ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.

02 30.10.2024 ஆம் திகதி முதல் 30.11.2024ஆம் திகதி வரையான வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரையான அலுவலக நேரத்தில் சிறாப்பர் பிரிவில் பண வைப்புக்களை மேற்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

03. வருகை தந்து பணத்தை செலுத்த முடியாத வழங்குநர்கள் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம் பெயரில் இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளையில் பேணப்படும் 7040260 எனும் கணக்கிலக்கத்திற்கு 30.11.2024 ஆம் திகதி வரையில் மட்டும் வைப்பு செய்யலாம் (குறித்த பற்றுச்சீட்டை விண்ணபத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்) பணத்தை வைப்புச்செய்யகூடிய இறுதி நாள் 30.11.2024 ஆம் திகதி என்பதுடன் அந்த திகதியின் பின் பதிவுசெய்து கொள்வதற்காக பணம் வைப்புச் செய்யும் நிறுவனம் எக்காரணம் கொண்டும் பதிவுசெய்து கொள்வது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

04. பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்தின் 17.12.2019 ஆம் திகதிய சுற்றுநிருபம் PFD Circular No 08/2019 இன் 2.3 அத்தியாயத்தின் பிரகாரம் இந்த நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளும் சகல வழங்குநர்களும் WWW. promise.lk அரச இலத்திரனியல் பெறுகை முறைமையின் (Electronic Government Procurement – EGP) கீழ் பதிவு செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொள்வதால் அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினதும் பெறுகைகளில் கலந்து கொள்வதற்கு வழங்குநர்களிற்கு வாய்ப்பு கிட்டும்.

05. விண்ணப்பதாரர்கள் இலங்கையில் பதிவு செய்யப்படுவதுடன், பதிவு செய்யப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தின் தொலைபேசி, தொலைநகல், மற்றும் மின்னஞ்சல் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (வணிகப் பதிவின் நகல் பிரதி இணைக்கப் படல் வேண்டும்)

06. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளிமூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

07. ஏதேனும் சந்தர்ப்பங்களில் பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகள் திருப்திகரமாக இல்லை என தெரியவரும் போது காரணங்கள் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

08. பொருட்கள் மற்றும் சேவைகளை ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.

09. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.

10. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

11. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது, வியாபாரப் பெயர் பதிவுச் சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருட்களும் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராகப் பதிவு செய்யப்படும்.

12. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

13. உருப்படி இலக்கம் B [அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்கள்] இற்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணபத்துடன் இணைக்க வேண்டும்.

A).தயாரிப்பு எல்லை [Product range]
B).உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம் [Copy of manufacturer authorization letter]
C).CDDA நகல்
D).நிறுவுதல் அடிப்படை - [Installation Base] (இது தொடர்பானமேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

மாதிரிவிண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| பதிவு செய்யும் வகை: | |
| தொகை (ரூபா) | 1,000.00 |
| திகதி | |

வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களைப் பதிவுசெய்தல் - 2025
போதனாவைத்தியசாலை யாழ்ப்பாணம்

1.நிறுவனத்தின் பெயர் :- ..........
2.நிறுவனத்தின் முகவரி :- ..........
3.தொலைபேசி இல. :- ..........
4.தொலைநகல் இல. :- ..........
5.மின்னஞ்சல் முகவரி (அலுவலகம்) :- ..........
6.வியாபாரப் பதிவுப் பெயர் :- ..........
7.VAT பதிவு இலக்கம் :- ..........
8.கடன் வசதி பற்றிய விபரம் (கால எல்லை/தொகை) :- ..........
9. ஆவணங்களின் பட்டியல் :- ..........
(விபரப் பட்டியல் இணைக்கப்படுதல்)

| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவைவிபரம் | இணைப்பு இல. |
|---|---|---|
| 1 | வியாபாரச் சான்றிதழ் வன்பிரதி | |
| 2 | பொருட்கள் சேவைகள் விபரம் (Make, Model, Brand) | |
| 3 | Manufacturer Authorization Letter (Soft Copy in CD) | |
| 4 | CIDA /CCDA/NMRA latest Registration (Soft Copy CD) | |
| 5 | Last two years history of supply / works (Annex copy of orders or letter of Acceptance from government & private institutes ) (soft copy CD) | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன்.

விண்ணப்பதாரியின் பெயர்:- ..........
விண்ணப்பதாரியின் ஒப்பம்:- ..........
திகதி:- ..........
நிறுவன இறப்பர் முத்திரையும் திகதியும்:- ..........

Note: Combine all documents along with CD and submit in an envelope for each category separately

(C1476)

**பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 3
காவியத் தொடர் 619





ஆழ்வார்க்கடியான் அருகில் போய் நின்றுகொண்டு "இளவரசருக்குப் பெரிய கண்டம் நேர்ந்தது உண்மைதான். ஆனால் அவருடைய உயிருக்கு அபாயம் ஒன்றும் நேரவில்லை. விரைவில் கிடைத்து விடுவார்!" என்றான். "உனக்கு எப்படி தெரியும்?" என்றது ஒரு குரல்.

"நான் நிமித்தக்காரன் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் பார்த்து அறிந்து கொண்டேன் நிமித்தங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்."

"பொய்! நீ சொல்வது பொய்! நீ நிமித்தக்காரன் அல்ல! நீ ஒற்றன்!" என்றது அதே குரல். வந்தியத்தேவன் அந்தக் குரலுக்கு உரியவனைக் கவனித்துப் பார்த்தான். அவன் வைத்தியர் மகன் என்பதை அறிந்து கொண்டான்.

"பைத்தியக்காரா! என்னையா ஒற்றன் என்று சொல்லுகிறாய்? நான் ஒற்றனாயிருந்தால், யாருடைய ஒற்றன்?" என்று கேட்டான். "பழுவேட்டரையர்களுடைய ஒற்றன்" என்று வைத்தியர் மகன் பளிச்சென்று மறு மொழி கூறினான்.

"என்ன சொன்னாய்?" என்று வந்தியத்தேவன் கர்ஜித்தான். ஜனங்கள் கீழே நின்ற நிலா முற்றத்திலிருந்த வந்தியத்தேவன் நின்ற மேல் மாடம் பன்னிரண்டு அடி உயரத்தில் இருந்தது. அதை அவன் பொருட்படுத்தாமல் மேல் மாடத்திலிருந்து வைத்தியர் மகன் பேரில் பாய்ந்தான். இருவருக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. சண்டை என்றால் எல்லாருக்கும், எல்லாக் காலத்திலும் வேடிக்கை பார்ப்பதில் பிரியம் உண்டு அல்லவா?

வந்தியத்தேவனுக்கும், வைத்தியர் மகனுக்கும் சண்டை நடந்த இடத்தைச் சுற்றி இடைவெளி விட்டு ஜனங்கள் வட்ட வடிவமாக நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். மேல் மாடத்தில் இருந்தவர்கள் கவலையுடன் அதை நோக்கினார்கள். ஜனக் கூட்டதில் பெரும்பாலோர் விடயம் இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே முன்னைவிட அதிகக் கூச்சல் போடத் தொடங்கினார்கள். இச்சமயத்தில் வாசற் பக்கத்திலிருந்து சங்கநாதமும் கொம்புகளின் முழக்கமும் கேட்டன. "முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் வருகிறார் வழிவிடுங்கள்!" என்ற குரல் முழக்கமும் கேட்டது. அந்தப் பெருங் கூட்டத்தில் முதன் மந்திரிக்குத் தானாகவே வழி ஏற்பட்டது.

### 26 ஆம் அத்தியாயம்
### அநிருத்தரின் பிரார்த்தனை

முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் வீற்றிருந்த பல்லக்கு நிலாமுற்றத்தில் கூடியிருந்த ஜனக்கூட்டதைப் பிளந்து வழி ஏற்படுத்திக் கொண்டு வந்தது. இருபக்கமும் விலகி நின்ற மக்கள் முதன் மந்திரியிடம் தங்களுடைய மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்கள். பலர் இளவரசரைப் பற்றிய தங்கள் கவலையையும் வெளியிட்டார்கள். முதன் மந்திரியும் கவலை தேங்கிய முகத்துடனே தான் தோன்றினார்.

ஆனாலும் இரு கைகளையும் தூக்கி ஜனங்களுக்கு ஆறுதலும் ஆசியும் கூறும் பாவனையில் சமிக்ஞை செய்து கொண்டு சென்றார். அரண்மனைக் கட்டடத்தின் முகப்பை அடைந்ததும் பல்லக்கு கீழே இறக்கப்பட்டது. முதன் மந்திரி வெளி வந்து முதலில் மேலே நோக்கினார். பெரிய ராணியும் இளவரசியும் அங்கே நிற்பதைப் பார்த்து, வணக்கம் செலுத்தினார். பிறகு, வந்த யுத்தம் நடந்த இடத்தை நோக்கினார். இவ்வளவு நேரம் தங்களைச் சுற்றி நடப்பது ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் வந்தியத்தேவனும், பினாகபாணியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

## சிறுவர் அரங்கம்

## வறிய விருந்தினன்




வறியவன் ஒருவன், பணம் படைத்த உறவினர்கள் வீட்டில் விருந்தொன்றுக்கு அழைக்கப்பட்டான். விருந்திற்கு அணிந்து செல்ல அழகிய உயர்ந்த ஆடை இல்லாததால் பஞ்சில் நெய்ந்த மெல்லிய ஆடையொன்றை அணிந்து சென்றான்.

தன் ஆடையைக் கண்டு பிறர் எள்ளி நகைப்பர் என்றெண்ணியவன் விசிறியொன்றைக் கையிலெடுத்து விசிறிய வண்ணம் "இயல்பாகவே கோடை வெப்பம் என்றால் எனக்கு மிகுந்த வெறுப்பு, எனவே வாட்டும் குளிர் காலத்தில் கூட விசிறியால் விசிறிக் கொள்வேன்" என்றான்.

வறியவனின் இந்தப் போலி நாடகத்தை வெளிப்படுத்த திட்டமிட்டான் விருந்து கொடுத்தவன். விருந்தின் முடிவில் எல்லோரும் உறங்குவதற்கு படுக்கைகள் பாதுகாப்பான உள் அறைகளில் போடப்பட்டன.

இந்த வறியவனுக்கு மட்டும் வீட்டின் முகப்பிலுள்ள குளத்தின் அருகில் திறந்த வெளித் திண்ணையொன்றில் மெல்லிய படுக்கை விரிக்கப்பட்டு அதில் புல்லினால் செய்த தலையணை வைக்கப்பட்டது.

பின்னர் போர்த்திக் கொள்ளப் போர்வையேதுமின்றி வறியவனைப் படுக்கச் செய்தான். பக்கத்தில் நின்று நடக்கப் போகும் வேடிக்கையைக் காணத் துடித்துக் கொண்டிருந்தான் விருந்து கொடுத்தவன்.

குளிர்தாங்க மாட்டாமல் நள்ளிரவில் படுக்கையிலிருந்து எழுந்தான் வறியவன். படுக்கை விரிப்பை எடுத்துப் போர்த்திக் கொண்டு தப்பிச் செல்ல முனைந்தான். பரபரப்பில் படுக்கை விரிப்புத் தட்டி அருகிலிருந்த குளத்தில் விழுந்து விட்டான்.

இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த விருந்து கொடுத்தவன் "என்ன நடந்தது?" என்று ஒன்று மறியாதவன் போல் கேட்டான்.

"வெப்பத்தின் மீது எனக்குள்ள வெறுப்புத்தான் வேறொன்றுமில்லை. திறந்த வெளித் திண்ணையில் தான் எனக்கு நீங்கள் படுக்கைப் போட்டீர்கள் என்றாலும் உங்கள் குளத்தில் குளித்து விட்டுத்தான் தூங்க வேண்டும் என்பது என் விருப்பம் என்று பக்குவமாக விடையளித்தான் வறியவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆக்கப்பூர்வமான கண்ணோட்டம் மனதை திறந்து புதிய சாதனைகள் புரியும் புத்துணர்வைத் தருகிறது.
> ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீண்டு நிலைக்க முடியுமென எவரும் நினைத்து விடாதீர்கள்

உலக வரலாற்றில் மிகப்பெரும் சாம்ராஜ்யங்கள் அடியோடு இல்லாது ஒழிந்து போன சம்பவங்கள் நிறையவே உண்டு.

விஜயநகரப் பேரரசு முதல் சோழப் பேரரசுகள் ஈறாக அடி அத்திவாரம் இல்லாமல் அழிந்துபோன வரலாறு இந்த உலகுக்கு உண்டு.

ஆக, தோன்றியவை மறைவதும் புதியவை தோன்றுவதும் இப் பிரபஞ்சத்தின் இயல்பு.

அந்த வகையில், மாற்றங்கள் எப்போதும் நடந்த வண்ணம் உள்ளன. இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. அண்மையில் நம் நாட்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றி என்பது இந்த நாட்டின் அரசியலில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றமாகும்.

இங்கு மாற்றங்கள் குறித்து நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. மாறாக மாற்றங்கள் ஏற்படும் என்பதை உணர்ந்து கொள்வதுதான் இங்கு மிகவும் முக்கியமானது.

எனினும் பலர் மாற்றத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. காலாகாலமாக தாங்களே ஆட்சி செய்ய முடியும் என்ற மமதை அழிவை ஏற்படுத்தி விடுகிறது.

இதற்கு நல்ல உதாரணங்கள் நம் மத்தியில் உண்டு. எங்ஙனம் இலங்கை அரசியல் வரலாற்றின் ஆரம்ப கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன அஸ்தமித்துப் போனதன் அடிப்படையில் எல்லாமும் நிலையற்றவை என்பது உணர்தற்குரியது. இது நம் நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. உலக நாடுகளிலும் இந்த அஸ்தமனங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அண்மையில் தமிழகத்தில் நடிகர் விஜய் அவர்கள் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியின் மாநாட்டை மிகப் பிரமாண்டமான முறையில் நடத்தியிருந்தார்.

ஒரு தனி மனிதனாகத் தனது செல்வாக்கை நிரூபித்துள்ள விஜயின் ஆளுமை தமிழகத்தின் நீண்டகாலமாக இருக்கின்ற அரசியல் கட்சிகளை ஆட்டம் காண வைத்து விடுமோ என்ற ஏக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு மூலகாரணம் பழைமையான திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளின் சமகாலத் தலைவர்கள் விட்ட தவறு என்பது இங்கு புரிதற்குரியது.

ஆம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழகத்தின் முதலமைச்சருமாகிய ஸ்டாலின், துணை முதலமைச்சர் பதவியைத் தனது மகன் உதயநிதி ஸ்டாலினுக்கு வழங்கியபோது, நீண்ட நெடுங் காலத்து கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்டம் காணத் தொடங்கியது.

அதேபோன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக இருக்கின்ற எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஓ.பன்னீர்செல்வத்தை அனுசரித்துச் செல்லுகின்ற பக்குவத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனால் எம்.ஜி.ஆரால் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கட்சி நிலைகுலைந்து போனது.

இங்குதான் தமிழகத்தின் அரசியலில் ஓர் வெற்றிடம் ஏற்படுகிறது. அந்த வெற்றிடத்தை நடிகர் விஜய் அவர்கள் கச்சிதமாக இனம் கண்டு கொள்கிறார். இனித் தமிழகத்தின் அசைக்க முடியாத ஓர் அரசியல் கட்சியாக நடிகர் விஜயின் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் விளங்கப் போவது உறுதி.

ஆக, தென்னிலங்கையின் தொன்மை மிகு அரசியல் கட்சிகள் எங்ஙனம் வழக்கொழிந்து போயினவோ, அதேபோல் நம் தமிழ் மண்ணில் நீண்டு நிலைத்த அரசியல் கட்சிகள் ஆட்டம் காணத்தலைப்பட்டுள்ளன. இதிலிருந்து அவற்றை மீட்டெடுத்து நிலை நிறுத்துவதாக இருந்தால் அதற்காக அதன் சமகாலத் தலைவர்கள் கடுமையான விட்டுக்கொடுப்பை ஆற்ற வேண்டும்.

# அவ்வளவு எளிதில் ஆட்சியை கவிழ்த்து விட முடியாது

## பிரசார கூட்டத்தில் ஜனாதிபதி அநுர

அறுகம்பே சம்பவத்தை அடிப்படையாக வைத்தேனும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியுமா என எதிரணிகள் சிந்தித்துக் கொண்டுள்ளன.

அவ்வளவு எளிதில் இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட முடியாது. நாட்டை மீட்டெடுக்கும்வரை எம்மை வீழ்த்த முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் டொலரின் பெறுமதி 400 ரூபா வரை செல்லும் என பிரசாரம் செய்தனர். இன்று அவ்வாறு நடந்துள்ளதா? இல்லை.

எமது பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

சாதகமான பிரதிபலன் கிட்டியுள்ளது. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எமது ஆட்சியில் அஸ்வெசும இல்லாமல் செய்யப்படும் என்றனர். அதுவும் நடக்கவில்லை. அன்று கூறிய அனைத்தும் பொய் யென உறுதியாகியுள்ளது.

எனவே, பொய்களை நம்பி எவரேனும் ஏமாந்திருந்தால் அவர்களும் இன்று உண்மையை உணர்ந்திருப்பார்கள்.

எனவே, எமக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை மக்கள் வழங்குவார்கள்.

இதனால் சிலர் குழம்பிப் போயுள்ளனர். ஏதேனும் சிறு சம்பவம் நடந்தால்கூட ஆட்சி கவிழுமா என எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

அறுகம்பே சம்பவம் தொடர்பில் அனைவரும் ஊடக சந்திப்புகளை நடத்துகின்றனர். அதன் மூலமாக வேனும் ஆட்சி கவிழுமா என்ற சந்தோசத்தில் அவர்கள் உள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னரே எமக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து சுற்றுலாத்துறையும் பாதிக்காத வகையில் திட்டமிட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-7)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம், கப்பிரிங்கம பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிஹிபியகொல்லேவ பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், கப்பிரிங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய முதியவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த முதியவர் சம்பவத் தினத்தன்று இரவு நேரத்தில் தனிப்பட்ட தேவை காரணமாக தனது வீட்டின் பின்புறத்திற்குச் சென்றுள்ளார்.

இதன்போது வீட்டின் பின்புறத்தில் இருந்த காட்டு யானை ஒன்று முதியவரை தாக்கியுள்ள நிலையில், காயமடைந்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

## ஓடும் பஸ்ஸில் இருந்து பெண்ணை கீழே தள்ளிவிட்டவர் கைது

ஓடும் பஸ்ஸில் இருந்து பெண் ஒருவரை கீழே தள்ளிவிட்டுக் காயப்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்த சிங்கபுர பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய திருமணமான நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

சந்தேக நபரும் காயமடைந்த பெண்ணும் நீண்ட காலமாகத் தகாத உறவில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில் இருவரும் பொல நறுவையில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றில் ஏறியுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபரும் காயமடைந்த பெண்ணும் பஸ்ஸிற்குள் வைத்து தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

கோபமடைந்த சந்தேக நபர் காயமடைந்த பெண்ணை ஓடும் பஸ்ஸில் இருந்து கீழே தள்ளிவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## புதிய அரசு இதுவரை பணம் அச்சிடவில்லை

### அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் எந்தவொரு நாட்டிலிருந்தும் கடனுதவியோ மற்றும் இதுவரை பணத்தாள்களோ அச்சிடவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுவாக, புதிய திறைசேரி உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் காலாவதியாகும்போது விகிதாசார முறையில் புதிய [illegible] வெளியிடும் [illegible] மத்திய வங்கி கொண்டுள்ளது.

அந்த செயல்முறை வழமையாக நடக்கும் ஒன்று.

மேலும், பணம் அச்சிடுவதை எடுத்துக்கொண்டால், உண்மையில் புதிய பணம் எதுவும் அச்சிடப்படவில்லை.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் நாணயத்தாள் ஒன்றை பார்க்க எனக்கும் விருப்பம். ஆனால் இதுவரை அது வெளியிடப் [illegible] அவர் [illegible]. (ம-7)

## வெடி பொருட்கள் தொடருந்தில் மீட்பு

(கொழும்பு)

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த கடுகதி தொடருந்திலிருந்து மெகசின் ஒன்றும், ரீ 56 ரக தோட்டாக்கள் 57 உம் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று மதியம் 12:10 அளவில் பெலியத்த தொடருந்து நிலையத்தைச் சென்றடைந்த 8050 என்ற இலக்கம் கொண்ட தொடருந்தின் 3ஆம் வகுப்பு பெட்டியொன்றின் ஆசனத்திற்குக் கீழிருந்த பையொன்றிலிருந்து இவை மீட்கப்பட்டதாக பெலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடருந்து பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கிய தகவல்களுக்கமைய, பொலிஸார் இந்த மெகசின் மற்றும் தோட்டாக்களை மீட்டுள்ளனர். (ம-7)

### சிறைக்கு எடுத்துச் சென்ற

## உணவுப் பொதியில் போதைப் பொருள் மீட்பு

புதிய மகசீன் சிறைச்சாலையில் கைதியொருவரை பார்க்கச் சென்றவர் எடுத்துச் சென்ற உணவுப் பொதியிலிருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவரை பார்வையிட வந்த நபரொருவர் கொண்டு வந்த உணவுப் பொதியில் இரண்டு சிறிய பொதிகளில் சூட்சுமமாக மறைத்து வைத்து எடுத்துச் சென்ற ஐஸ்போதைப்பொருள்கைப் பற்றப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த போதைப் பொருளை கொண்டு வந்த நபர் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக பொரளை பொலிஸாரிடம்ஒப்படைக்கப் பட்டதுடன், சம்பவம் தொடர்பில் மெகசின் சிறைச்சாலையினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(குருநாகல்)

நாரம்மல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பனாவிட்டிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றின் கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2025-31.12.2025 வரையுள்ள காலப் பகுதிக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2025

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 30/10/2024 இல் இருந்து 12/11/2024 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 13/11/2024 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 13/11/2024 காலை 10.30 மணி
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி இடுதல் அவதானிக்கப்படின் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
07. கறைநிரற் பட்டியலில் காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்ட றியப்படின் அக்கேள்விப்பத்திரம் எதுவித அறித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்விக் கோரிக்கை களை சமர்ப்பிக்கப்படாதுவிடின் எதுவித அறித்தலும் இன்றி நிராகரிக்க பிரதேசசபையின் கேள்விச் சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதி நிதியோ சமூகமளிக்கலாம்.
10. சந்தையின் அண்மை மையப்பகுதியிலிருந்து 01 கி.மீற்றர் தூர சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி மற்றும் சந்தைப்பொருட்கள் விற்பதும், சபையின் இறைச்சிக்கடையின் சூழ உள்ள பகுதியில் விற்பதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
11. மரக்கறி, மீன் ஆகிய சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதாக ஒப்பமிட வேண்டும்.

I. குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு (நிறுத்தற் கருவி) உற்பத்தி யாளரால் தெளிவாக பார்க்கக் கூடியதாக வைக்கப்படல் வேண்டும்,
தராசுகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் நிறுவை அளவை திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் ஆவணங்கள் எச்சந்தர்ப்பத்திலும் சபைக்கு சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.

II. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பிரதேசசபையால் தெரிவுசெய்யப்பட்ட இடமொன்றை விவசாயிகளுக்கு குத்தகைதாரரால் ஒதுக்கிக் கொடுக்கப்படல் வேண்டும், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடம் இருந்து பிரதேசசபைச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வீதவரியை அறவிடுதல் வேண்டும். விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு ஏலமிட்டு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் பத்து சதவீத கழிப்பனவு எந்த தரப்பினரும் சந்தை வளாகத்தில் அறவிடலாகாது.

III. குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பிரதேசசபையால் அங்கீகரிக் கப்பட்ட பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர், திகதி, பொருளின் வகை, பொருளின் நிறை, மொத்தத் தொகை, அறவிடப்படும் வரித்தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும். பாவிக்கப்படும் பற்றுச்சீட்டு ஒவ்வொன்றுக்கும் பிரதேசசபையால் வடிவமைக்கப்பட்ட முத்திரை ஒன்றை பதித்திருத்தல் வேண்டும்.

IV. உற்பத்திப் பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே உற்பத்தியாளராலேயே தரத்திற்கேற்பவும், ஏலமிடல் மூலம் விலை கூறி விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் கட்டாயமாக குத்தகைதாரர் அவ்விடத்தில் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும். அல்லது குத்தகைதாரரால் எழுத்து மூலமாக கோரிக்கையை முன்வைத்து சபையால் முன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக வேண்டும். ஒரே நேரத்தில் இருவரும் பிரசன்னமாய் இருத்தல் ஆகாது.

V. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு ஏல விலையின் உச்சமாக 4% (சதவீத) வரி மட்டுமே குத்தகை ஒப்பந்ததாரரால் அறவிடப்படலாம்.

VI. பிரதேசசபையினால் அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் பிறிதொரு பிரதேசசபையினால் வியாபார உரிமம் பெற்று கொண்டுவரப்படும். விற்பனை பற்றுச்சீட்டிற்கு குத்தகையாளரினால் வரி அறவிடக் கூடாது, நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம்.

VII. சந்தைக்கு வருகை தருகின்ற நுகர்வோர்களினதும், பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும். குத்தகை தாரரால் இச்சேவைக்காக சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பற்றுச்சீட்டை வழங்கி அறவிடமுடியும்

12. இறைச்சிக் கடைகளிற்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் கீழ்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

I. பிறிதொரு பிரதேசசபையின் குத்தகைதாரராக இருப்பின் இறைச்சிக்கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்ப டுத்திய ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

II. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும். சபையின் குத்தகைதாரர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவர் நடாத்துவதாக உறுதி செய்யப்படின் குத்தகை ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்தானதாக கருதப்படும்.

III. எமது பிரதேசசபையால் நிர்வகிக்கப்படுகின்ற கொல்களத்திலேயே இறைச்சிக் கான மாடுகள் ,ஆடுகள் வெட்டப்பட வேண்டும்.

IV. இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்து ரைக்கப்படும் சட்டதிட்டங்களிற்கமைவாக குத்தகைதாரர் நடந்து கொள்ள வேண்டும்.

V. கொல்களம் மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகை உரிமையாளரால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் நிலையங்களில் தொற்றுநோயற்ற உடல் ஆரோக்கியம் கொண்டவராக உள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் பரிசோதித்து மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

13. உரிய நிதி ஆண்டின் மாதாந்த கேள்வித்தொகையை சமனான தவணைக் கட்டணங்களாக செலுத்த வேண்டும் என்பதுடன், முதல் மூன்று மாத தவணைக் கட்டணத்தையும் தை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் அடுத்துவரும் மாதங்கள் 10ஆம் திகதிக்கு முன்னதாக மாதாந்த கேள்வி தொகையை செலுத்துதல் வேண்டும். எனினும் முற்பணம் செலுத்திய 3 மாத கேள்வி தொகையும் நிதியாண்டின் இறுதி 3 மாதங்களிற்கும் சீர்செய்யப்படும்.
14. மேற்கூறிய நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மீறுவாராயின் அல்லது அக்கடைக்கான குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குத்தகைக்காரர் நடப்பாராயின் எந்தத் நேரத்திலும் குத்தகை உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் என்பதுடன் 1/3 பங்கு முற்பணம் மீள வழங்கப்படாது. நடைபெற்ற காலப்பகுதிக்கான நிலுவையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்யவும், சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
15. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையினால் முன்வைக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு அதற்கு கட்டுப்பட்டவராக செயற்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.
16. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத் திலும் அறிந்து கொள்ளலாம்..

கேள்வி அறிவித்தல் அட்டவணை -

2025 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம்

| தொ.இல | குத்தகை விபரம் | 2025 ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட( மேடைகள், அங்காடிகள் நீங்கலாக) | 12,649,191.50 | 1,264,919.15 | 1000.00 | |
| 2 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 268,620.00 | 26,862.00 | 500.00 | |
| 3 | கொட்டடிச்சந்தை | 550,550.00 | 55,055.00 | 500.00 | |
| 4 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 62,150.00 | 6,215.00 | 500.00 | 500.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,266,870.00 | 126,687.00 | 500.00 | 500.00 |
| 6 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 304,700.00 | 30,470.00 | 500.00 | 500.00 |
| 7 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,216,720.00 | 221,672.00 | 500.00 | 500.00 |
| 8 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 129,470.00 | 12,947.00 | 500.00 | 500.00 |
| 9 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 514,404.00 | 51,440.40 | 500.00 | 500.00 |
| 10 | நெல்லியடி மீன் சந்தை | 578,710.00 | 57,871.00 | 500.00 | |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 11 | உடுப்பிட்டி சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட | 2,258,520.00 | 225,852.00 | 500.00 | |
| 12 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,178,000.00 | 217,800.00 | 500.00 | 500.00 |
| 13 | நவிண்டில் சந்தை | 36,520.00 | 3,652.00 | 500.00 | |
| 14 | மண்டான் சந்தை | 50,160.00 | 5,016.00 | 500.00 | |
| 15 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 273,020.00 | 27,302.00 | 500.00 | 500.00 |
| 16 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,831,500.00 | 183,150.00 | 500.00 | 500.00 |
| | உடுப்பிட்டி சந்தை கோழிக்கடை | 235,840.00 | | | |
| 17 | சாண்டா சந்தை கோழிக்கடை | 77,880.00 | 7,788.00 | 500.00 | 500.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 18 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 134,640.00 | 13,464.00 | 500.00 | 500.00 |
| 19 | துன்னாலை வடக்குச் சந்தை | 91,520.00 | 9,152.00 | 500.00 | |

**தொடர்புக்கான தொலைபேசி இல:**

**தலைமை அலுவலகம் : 021 226 3271**
**நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234**
**உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336**
**கட்டைவேலி உப அலுவலகம்: 021 226 1244**

**கடமை நேரம் மு.ப. 8.30 - பி.ப. 16.15 வரை**

(சி-1477)

30.10.2024

**செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி...

பலப்படுத்தப்பட்டிருந்தது.

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் வெடிகுண்டு இருப்பதாக நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நீதிமன்றத் தொகுதிக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

விசேட அதிரடிப் படையினர் நீதிமன்ற சூழலில் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் நீதிமன்றத்திற்குள் செல்வோரும் உடல் பரிசோதனையின் பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

அத்தோடு நீதிமன்றத்தைச் சுற்றி பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம-7,30)

## அஞ்சல் மூல...

அதன்படி மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலும் அஞ்சல் மூல வாக்களிப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று தவிர்ந்து, அடுத்த மாதம் 4ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் முப்படை முகாம்களிலும் அனைத்து அரச நிறுவனங்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பொதுத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக 750,000 பேர் விண்ணப்பித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## பயங்கரவாதச்...

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டவுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) நீக்குவது அல்லது திருத்துவது தொடர்பான விடயத்தை அரசாங்கம் முன்னெடுக்க உத்தேசித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் தற்போது எந்தக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை எனவும், அது தொடர்ந்தும் இயங்கும் எனவும் தெரிவித்தார்.

தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்து அதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்குவதன் மூலம் மாத்திரமே மாற்றங்களைச் செய்ய முடியும் என்றார்.

எவ்வாறெனினும், பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) திருத்தப்பட வேண்டும் என்ற கருத்து நீண்டகாலமாகவே நிலவி வருகிறது.

புதிய பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானதும் அரசாங்கம் இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் 2025ஆம் ஆண்டு நிச்சயமாக சம்பள உயர்வு வழங்கப்படும். என்றாலும், எவ்வளவு ரூபாயால் சம்பளம் அதிகரிக்கப்படும் என்பதை திறைசேரியில் உள்ள நிதியை மதிப்பாய்வு செய்த பின்னரே கூறமுடியும்.

"அரச ஊழியர்களுக்கும் தனியார் ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் என்ற ரீதியில் எமக்கு விருப்பம். ஆனால், திறைசேரியில் உள்ள நிதியின் பிரகாரம்தான் குறித்த தீர்மானம் எடுக்கப்படும்.

ஜனவரிமாதம்முதல்உதய ஆர்.செனவிரத்னவின் குழு அறிக்கையின்படி சம்பளத்தை அதிகரிப்பதற்கு கடந்த அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அமைச்சரவையில் முடிவெடுக்க முடியும் ஆனால், அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமே.

கடந்த ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10ஆயிரம் ரூபாயினால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது. ஏப்ரல் மாதம் வரையான நிலுவைத்தொகையை ஒக்ரோபர் மாதம் முதல் வழங்கப்படும் எனக் கூறியது. ஏப்ரல் மாதம் முதல் 10ஆயிரம் ரூபாய் கிடைக்கப்பெற்றது. ஆனால், நிலுவைத் தொகையை வழங்கத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, பொதுச்சேவை வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் மற்றும் விதவை மற்றும் அநாதை ஓய்வூதியப் பங்களிப்புகளைச் சேகரிப்பதில் திருத்தம் செய்து ஜனவரி 10, 2024 அன்று ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான நிலுவைத் தொகையை 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை மாதத்திற்கு 5000 ரூபாய் வீதம் நிலுவைத் தொகையை வழங்குவது என்ன என்பது சுற்றறிக்கையில் தெளிவாக உள்ளது.

அப்போது நாட்டுக்கு ஒரு அப்பட்டமான பொய்யை கூறியுள்ளனர். நாட்டுக்கு ஒக்ரோபர் மாதம் இருந்து செலுத்த முடியும் என்றே கூறினர்.

இவைதான் பொய். முன்னாள் ஜனாதிபதி மக்களை ஏமாற்றியுள்ளமையேஇந்த சுற்றறிக்கை தெளிவுபடுத்துகிறது.

அதனால் அரச ஊழியர்களுக்கு நாம் கூறுவதாவது, ஒரு நாளும் நாம் உங்களை ஏமாற்ற மாட்டோம்.

2025ஆம் ஆண்டு முதல் அரச சேவைக்கு சம்பள உயர்வு வழங்கப்படும். அதற்கான உத்தரவாதத்தை வழங்குவோம். ஆனால், அது எவ்வளவு ரூபாயாக இருக்கும் என்பதை தற்போது கூற முடியாது. நிதி தொடர்பிலான மதிப்பாய்வுகளின் பின்னர்தான்அதனைக் கூறமுடியும். வரவு - செலவுத் திட்டத்தில் இது குறித்து அவதானம் செலுத்தப்படும்.

மேலும் ஒரு குறிப்பிட்ட முறைப்படிவாகன இறக்கு மதி செயல்முறையை அனுமதிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதற்கு மத்திய வங்கியும் இணக்கம் தெரிவித்துள்ளது.

எனவே, எதிர்காலத்தில் அதற்கான முறையான நடைமுறையைத் தயாரித்து, பொது மக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

## மண்டைதீவில்...

மக்கள், அரசியல் பிரதிநிதிகளின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

மண்டைதீவில் கடற்படையினரின் தேவைக்காக காணி அளவீட்டு திணைக்களத்தால் காணி அளவீட்டிற்காக நேற்று செவ்வாய்க்கிழமை மண்டைதீவிற்கு சென்றிருந்தபோது அங்கு காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் காணி உரிமையாளர்களினால் காணி கடற்படைக்கு வழங்கச் சம்மதம் இல்லை என்ற கடிதமும் வழங்கப்பட்டமை அடுத்து அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டது.

எதிர்ப்பு நடவடிக்கையில் பொதுமக்களுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2024.10.29
சீட்டிழுப்பு இலக்கம் 5640
P 9 1 4 3 0 1
அத சம்பத P 4 3 0 1
சீட்டிழுப்பு இலக்கம் 215
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.10.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1670
G 08 32 63 71 G
Double Chance 75633

மெகா பவர்
திகதி 29/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1988
Q 14 08 23 56 75
099614

லக்கி 7 VIP
திகதி 2024.10.29
சீட்டிழுப்பு இலக்கம் 0466
M 0 6 4 5 9 3 M

கோடீசுவர
சீட்டிழுப்பு இலக்கம் 3882
சீட்டிழுப்பு திகதி 29.10.2024
Z 03 05 38 49
Z 033504

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.29
சீட்டிழுப்பு இலக்கம் 949
கடகம் 08 19 22 31 கடகம்
096295 20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2614 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 29.10.2024 தினம் செவ்வாய்
06 23 27 47 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,708,974.40
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.10.2024 வெற்றி வாரம் 348 வர்ணம் சிவப்பு
K 9 2 6 3 7 5
60173
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,636,548.00

சனிதா
திகதி 2024.10.29 வெற்றி வாரம் 4775 வர்ணம் பச்சை
08 11 39 43 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,601,633.60
56971

சசிரி
வெற்றி வாரம் 547
2024.10.29
03 15 23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,770,120/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4326 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.10.29 தினம் செவ்வாய்க்கிழமை
23 52 57 60 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,308,220.00
118706

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 02 16 27 55 64
1790
29.10.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 553,208,927.80

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2440
சீட்டிழுப்பு திகதி 2024.10.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,207,756.80
08 26 47 48 S
664712

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### வன்னி மாவட்டம்



**அன்பான அரச பணியாளர்களே!**

வன்னிப் பெரு நிலப்பரப்பின் சிறந்த கல்விப் புலமையும் ஆற்றலும்மிக்க கலாநிதி நவரத்தினம் ரவீந்திரகுமாரன் அவர்களை உங்கள் பொன்னான வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுங்கள்.

**கலாநிதி நவரத்தினம் ரவீந்திரகுமாரன்**

முன்னாள் பொருளியல் சிரேஸ்ட விரிவுரையாளர்
(கொழும்புப் பல்கலைக்கழகம், வவுனியாப் பல்கலைக்கழகம்)

(C-054)

**வன்னி மண்ணின் வளமான எதிர்காலத்திற்காக உங்களுடன் நான்...**

X 5

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**



## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### வன்னித் தேர்தல் தொகுதி

**என் அன்பான அரச உத்தியோகத்தர்களே!**

நானும் ஓர்அரச உத்தியோகத்தர் என்ற அடிப்படையில் எமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கும், சேவை இடையூறு விளைவிக்கும் சக்திகளுக்குக்கும் இடம் கோடாது சுயாதீனமாக உழைப்பேன் என உறுதியளிக்கிறேன்!



நான் உங்கள் வன்னி மகள்...

**யசோதினி கருணாநிதி**
[போராளி மலர்விழி]

(C-053)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி

X 6


## ஏற்றுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி செயற்பாடுகள் 937.95 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளன.

இலங்கை சுங்கம் விடுத்துள்ள தற்காலிக தரவுகளுக்கு அமைய 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த மாதம் ஏற்றுமதி வருவாய் 3.49 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1479)

076 825 7716 (ஆகாஸ்)



**மணமகள் தேவை**

1986 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தச்சு நிறுவன முதலாளிக்கு வரன் தேடப்படுகிறது. (2511)

**075 559 3232**



தொண்டு சேவையாக (எது வித கட்டணமும் இன்றி) SCANDI LANKA TRAVELS ஆகிய நாம் இலவச அமெரிக்க லொத்தர் விசாவிற்கான (USA GREEN CARD LOTTERY VISA)விண்ணப்பங்களை இனாமாக எதுவிதபின் கட்டணமும் இன்றி நிரப்பிக் கொடுக்கின்றோம். நீங்கள் உங்கள் அதிஷ்டத்தை எங்கள் தொண்டு சேவை மூலம் முயற்சி செய்து பார்க்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 725 2567 (2532)

**SCANDI LANKA TRAVELS**

702, கனடா நட்புறவு வீதி(விமான நிலைய வீதி) கட்டுநாயக்கா.



A/L - 2024 மாணவர்களுக்கான மாபெரும்

**புவியியல் கருத்தரங்கு**

**Oct - 31, Nov - 01 02 Days**

31.10.2024 1.00 pm - 5.00 pm பௌதீக புவியியல்
01.11.2024 8.00 Am - 4.00 pm செய்முறைப் புவியியல், மானிடப் புவியியல்

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் (C-1475)

**வளவாளர் திரு. P.S.V. தினேஸ்**

யாழ். நகரில் **D.C.M**

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அருகாமையில் | 077 778 9815



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 03.10.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் விசுவலிங்கம் மகேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 30.10.2024 இன்று புதன்கிழமை காலை 07.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் 01.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி. (2510)

தகவல்: குடும்பத்தினர்



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் 2 பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட 6 அறை வசதிகளுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் : (2533)

**077 391 2298/ 076 009 8601**



**வீட்டுப் பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு வீட்டுப் பணிப் பெண் தேவை.
(40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேவை) (2531)

தொடர்பு

**077 0735 931**



**நல்லூர் பாம் சென்ரர்**
(மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)

உள்ளூர் உற்பத்தி – கல்பேர்ட், புரொயிலர், (பேரன்ஸ்), ஊர்க்கோழி, முட்டைகள் விற்பனைக்குண்டு. தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை விரும்பிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். (2529)

19, முருகேசர் லேன், நல்லூர்.
TP: 077 712 6536



நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 05நாட்களே

அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L படிக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

0768226244

55000 இலவச விசாக்கள்

V2 Travels

0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351
0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675
0764550674 | 0764550670 | 0777718322
0768226236 | 0768226230 | 0776697960



**மொத்தக் கொள்வனவு**

அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (498)

48/= 80/=

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

077 773 0900


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.